வாராந்த மின்னிதழ்

# கருப்பு வெள்ளை

Black & White

மறைக்கப்பட்ட உண்மைகளின் உரிமைக் குரல்..!

கருப்பு : 01 | 2021 ஜூலை - 01 | வெள்ளை : 01



# கற்பிட்டிப் பிரதேசத்தில் அதிகரிக்கும் கொரோனா தொற்றாளர்கள்...!

(எம்.எச்.எம்.எஸ்)

(விரிவான செய்தி 03ம் பக்கத்தில்)

## சமூக ஊடகங்களை பிழையாக பயன்படுத்துவது இன்றுள்ள பாரிய அச்சுறுத்தல்

போலிச் செய்தி என தெரியாமல் போலிச் செய்தி ஒன்றினை ஏனையவர்களுக்கு பகிர்வதும் ஒரு குற்றமாகும். இதனால் குறித்த போலிச்செய்தியினை பகிர்ந்த நபரே அதற்கு பொருப்பாளராவார் என ஜனாதிபதியின் சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

“ அடிப்படை உரிமைகளும் சமூக ஊடகங்களும்” எனும் தலைப்பில் இணைய வழி கலந்துரையாடலில் சிறப்புரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். போலிச் செய்தி என்பது புதிய விடயமொன்றல்ல ஆதிகாலத்திலிருந்து இந்த போலிச் செய்திகள் காணப்படுகின்றன. வாய்மொழி மூலம் பகிரப்பட்ட போலிச் செய்திகள் பின்னர் அச்சு இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாக பகிரப்பட்டு தற்போது சமூக ஊடகங்கள் மூலம் பகிரப்படுகின்றது. சமூக ஊடகங்கள் வாயிலாக மேற்கொள்ளப்படும் போலிச் செய்தி பரவல் நடவடிக்கை மிக வேகமாக தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. தற்போதைய சூழ்நிலையில் எமது நாட்டில் போலிச் செய்திகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு ஐ.சீ.சீ.பீ.ஆர். சட்டம் மற்றும் குற்றவியல் தண்டனைச் சட்டத்தின் 120 ஆவது பிரிவின் கீழும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றதாகவும் அவர் கருத்து தெரிவித்தார்.



## ஜூலை 05 ஆம் திகதிக்கு பின் பள்ளிவாசல்கள் திறக்கப்படுமா?

**நாட்டில்** தற்போது அமுலிலுள்ள மாகாணங்களுக்கிடையிலான பயணத்தடை மற்றும் மக்கள் ஒன்று கூடுவதற்கான தடை என்பன உட்பட பல்வேறு கட்டுப்பாடுகள் முற்றாக நீக்கப்படும் வரையும், கொவிட் 19 தொற்றிலிருந்து நாட்டையும் நாட்டு மக்களையும் காப்பாற்றுவதற்காக சகல மதத்தலங்களும் மூடப்பட்டுள்ளன என்பதை முஸ்லிம் சமூகம் கவனத்தில் கொள்ள வேண்டும் என முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஏ.பி.எம்.அஷ்ரப் அறிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் 2021.06 20 ம் திகதியின் சுற்றுநிருபத்தின் படி நாட்டிலுள்ள அனைத்து மதத்தலங்களும் எதிர்வரும் 05ம் திகதி வரை மூடப்பட்டிருக்க வேண்டும். என்பதாகும். மதத்தலங்களை மீளத்திறக்கும் தீர்மாணத்தை சுகாதார அமைச்சும், கொவிட் செயலணியுமே தீர்மானிக்க வேண்டும் எனவும் பணிப்பாளர் ஏ.பி.எம்.அஷ்ரப் அறிவித்துள்ளமையும் குறிப்பிடதக்கது.



# கற்பிட்டியின் சொத்துக்களும் அவற்றை கண்டு கொள்ளாத கற்பிட்டி மக்களும்





- இந்த கட்டிடம் அகற்றப்பட்டு இதில் அமைக்கப்பட உள்ளது என்ன ?
- புதிய மின்சார நிலைய கட்டிடமா? அல்லது
- பெரிய மின் பிரப்பாக்கிகள் (Transformer's) சிலவா...!
- இந்த கட்டிடம் உடைப்பதற்கான கேள்விப்பத்திரம் கற்பிட்டி பிரதேச சபையினால் கோரப்பட்டதா?
- அது யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?
- அதற்காக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள பணம் எவ்வளவு?
- அந்த கட்டிட இடிபாடுகள் எங்கே கொட்டப்பட போகின்றது?

கற்பிட்டி வாழ் புத்திஜிவிகளே...! ஊர் நலன் விரும்பிகளே...!!
மேலே குறிப்பிட்ட விடயத்தில் மௌனிகளாக இருந்து விடாமல்
விழிப்பாக இருங்கள் கற்பிட்டியின் எதிர்கால சந்ததியினரின் நலன் கருதி



**விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய உரம் மாணியமாகவும் வழங்கப்படவில்லை பணத்திற்கும் வழங்கப்படவில்லை இதனால் விவசாயிகள் இடைநடுவில் விவசாயத்தினை கைவிட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் தமக்குரிய உரங்களை அவசரா-மாக அரசு வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து கற்பிட்டி நாவக்காடு விவசாயிகள் முன்னால் மாகாண சபை உறுப்பினர் எஸ்.எச்.எம். நியாஸ் தலைமையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதனை படங்களில் காணலாம்.**

**(படமும் தகவலும் - எம்.எச்.எம்.எஸ்)**



**எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிராக கற்பிட்டி கண்டக்குளி மீனவர்கள் முன்னால் மாகாண சபை உறுப்பினர் எஸ்.எச்.எம். நியாஸ் தலைமையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதனை படங்களில் காணலாம்.**

**(படமும் தகவலும் - எம்.எச்.எம்.எஸ்)**

கற்பிட்டி பிரதேசத்தில்...

(முன்பக்க செய்தி....)

கற்பிட்டி சுகாதார வைத்திய அதிகார பிரிவின் கீழ் உள்ள 42 கிராம சேவை யாளர் பிரிவுகளிலும் கடந்த 2021 ஜனவரி மாதம் தொடக்கம் ஜூன் மாதம் வரையான காலப் பகுதியில் கோவிட் - 19 கொரோனா தொற்றா ளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள் ளதாக கற்பிட்டி சுகாதரா வைத்திய அதிகாரி காரியாலய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மேலும் கடந்த ஆறு மாத காலப்பகுதியில் கற்பிட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழ் சுமார் 278 கொரோனா தொற்றாளர்கள் உறதிப்படுத்தப்பட்டுள் ளதுடன் இவர்கள் அனைவரும் தமது வீடுகளில் சுயனிமைப்படுத்தப்பட்டனர். என்பதும் மேலும் இக் காலப்பகுதியில் ஐந்து மரணங்களும் இடம்பெற்றுள்ள மையும் குறிப்பிடதக்கது.

அத்தோடு கற்பிட்டி சுகாதார வைத்திய அதிகார பிரிவில் கொரோ னா தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையும் கட்டம் கட்டமாக இடம்பெற்று வருகின் றது அதன்படி முதற்கட்டமாக சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தி யோகத்தர்கள் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கும், வைத்திய சாலையின் அலுவலக உத்தியோகத் தர்கள், பொலிஸ் நிலைய அதிகாரி கள், பிரதேச சபையின் அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிக் கள உத்தியோகத்தர்கள், கற்பிட்டி பிர தேச செயலக அலுவலக உத்தியோக த்தர்கள், கிராம சேவையாளர்கள், சமூர்த்தி உத்தியோகத்தர்கள், அபிவி ருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இன் னும் கற்பிட்டியில் உள்ள 60 வயதி னை பூர்த்தி செய்த மதத்தலைவர்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட 85 கர்ப்பி ணித்தாய்மார்கள் ஆகியோருக்கும் இதுவரை கற்பிட்டியில் கொவிட் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன.

இவ்வாறான சூழ்நிலையில் கற் பிட்டி சுகாதார வைத்திய அதிகார பிரி வில் பொது மக்கள் சுகாதார வழிகாட் டல்களை பின்பற்றுவதில் அசமந்த போக்கினை கடைபிடிப்பதாகவும் இதன் காரணமாக கொரோனா தொற்றாளர்க ளின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து செல்வதினை அவதானிக்க முடிகின்றது. எனவும் சுகாதார பிரிவின ர் தெரிவிக்கின்றனறனர்.

# மின் தடையும் கற்பிட்டியும் விடை இல்லாத கேள்வி..?

**கற்பிட்டி** பிரதேசத்தில் தினசரி ஏற்படும் மின்தடை காரணமாக கற்பிட்டி பிரதேசத்தில் உள்ள சகல செயற்பாடுகளும் பாதிக் கப்பட்டு வருவது ஒரு தொடர் செயற்பாடாகவே காணப்படு கின்றது. மேலும் பரம்பரை பரம்பரையாக கற்பிட்டி பிரதேச மக்கள் இந்த மின்தடையை தினசரி அனுபவிக்க வேண்டும் என்ற ஒரு சாபக் கேடாகவே காணப்படுகின்றதனை நாம் கண்கூடாக காணும் உண்மை யாகவே உள்ளது.

இதற்கான ஒரு நிரந்தர தீர்விணை கற்பிட்டி பிரதேசத் தில் உள்ள எந்த ஒரு அரசிய ல்வாதியும் இதுவரைக்கும் பெற்றுத் தந்ததாக இல்லை. அன்று தொடக்கம் இன்று வரை கற்பிட்டி பிரதேசத்தில் ஒரு நாளைக்கு பல முறை மின்சாரம் அடிக்கடி தடைபடும் செயற்பாடு தொடர்வதுடன் மாதத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் காலை முதல் மாலை வரை மின்சார விநி-யோகம் துண்டிக்கப்படும் என முன்கூட்டியே அறிவிக்கப்பட்டு மின் துண்டிப்பு இடம் பெறுவ துடன் எவ்வித அறிவிப்பும் இன்றி அதே மாதத்தில் மேலும் இரண்டு மூன்று நாட்கள் மின் சாரம் துண்டிக்கப்படும் செயற் பாடுகளும் இடம்பெற்ற வண் ணமே கற்பிட்டி பிரதேசத்தில் காணப்படுகின்றது.

கற்பிட்டி பிரதேசமானது பெருந்தோட்ட பயிரான தெங்கு உற்பத்தி, விவசாயம், கடற் றொழில், உப்பு உற்பத்தி, தையல் இன்னும் மின்சாரத்தை பயன்படுத்தி மேற்கொள்ளப் படும். தொழில் முயற்சிகள் என நிறையவே கற்பிட்டிப் பிரதேச த்தில் காணப்படுகின்றமையும் குறிப்பிடதக்கதாகும். இவைகள் அணைத்து தொழில் முயற்சிக ளும் இவ் மின்சார தடை கார ணமாக பாதிக்கப்படுவதும் குறிப்பிடதக்கவிடயமாகும்.

மேலும் இக் கற்பிட்டி பிர தேசத்தில் காணப்படும் பாரிய பிரச்சினையான மின்சார தடை பற்றி இது வரை ஆட்சிக்கு வந்த எந்த அரசாங்கமும் இதற்கான நிரந்தர தீர்விணை பெற்றுத் தரவில்லை என்பது தான் நாம் இதுவரை கண்ட உண்மை. இதற்கான நிரந்தர தீர்விணை பெற்றுத் தருவதற்கு மாறி மாறி ஆட்சி அதிகாரத்தி ற்கு வரும் அதிகாரம் படைத்த கற்பிட்டி அரசியல் தலைமை களுக்கு தெரியவில்லை என எமக்கு எண்ணத் தோன்றுகிறது

எனவே இந்த மின்சார தடை, மின் துண்டிப்பு ஆகிய பிரச்சினைகளுக்கு ஒரு நிரந்தர தீர்விணை பெற்றுக் கொள்வ தற்கான முயற்சி ஒன்றினை கற்பிட்டி பிரதேச மக்களாகிய நீங்கள் மத்திய அரசின் கண் காணிப்பி கீழ் இயங்கும் பொது பணிகள் ஆணைக்குழுவின் முன் இப்பிரச்சினையினை கொண்டு செல்வதற்கான வேலைத்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைக் கின்றேன்.

எம்.எஸ்.எம்.எஸ்
கற்பிட்டி

வாராந்த மின்னிதழ்
Black & white
கருப்புவெள்ளை
மறைக்கப்பட்ட உண்மைகளின் உரிமைக் குரல்..!

**அன்பார்ந்த வாசகர்களுக்கு...**
**அஸ்ஸலாமு அலைக்கும்..., வணக்கம்....**

மறைக்கப்பட்ட உண்மைகளின் உரிமைக் குரலாய் கற்பிட்டி மண்ணிலிருந்து முதலாவது 'வாராந்த மின்னிதழ்' செய்திப் பத்திரிகையாக "கருப்புவெள்ளை" உங்களின் கையடக்க தொலைபேசிகளில் வளம் வரச் செய்த எல்லாம் வல்ல இறைவனுக்கு முதற் கண் நன்றி கூறியவனாகவும்...

எனது இம்முயற்சிக்கு உறுதுணையாகவும் பக்கபலமாகவும் இருக்கும் எனது சொந்தங்கள், நண்பர்கள், வாசகர்கள், வர்த்தகபிரமுகர்கள், விளம்பரதாரர்கள், என எனது உறவு வட்டங்கள் அணைவரையும் நினைவுகூர்ந்தவனாகவும்.

கற்பிட்டி பிரதேசத்தில் மக்களுக்கு தெரியாமல் மறைக்கப்பட்டுள்ள பல உண்மைகளை வெளி உலகிற்கு வெளிச்சம் போட்டு காட்டுவதற்காக கற்பிட்டி மண்ணிலிருந்து ஒரு செய்திப் பத்திரிகை வெளிவர வேண்டும் என்ற எனது நீண்ட நாள் இலட்சியப் பயணத்தின் ஒரு மைக் கல்லாக 'வாராந்த மின்னிதழ்' "கருப்புவெள்ளை" என்ற புதிய பெயருடன் வாசகர்களின் சிந்தனையை தூண்டும் வண்ணம் வெளிவருகின்றது...

முழுக்க... முழுக்க.... இப்பத்திரிகையை வழிநடாத்த போவது வாசகர்களாகிய நீங்கள்தான்... உங்கள் கருத்துக்கள் ஆலோசனைகளுக்கு அமைய ஆராய்ந்து அதன் ஒழுங்கமைப்புக்கள் மாற்றியமைக்கப்படும்.

மேலும் இன்ஷா அல்லாஹ் தற்போது 'வாராந்த மின்னிதழ்' ஆக வெளிவரும் "கருப்புவெள்ளை" இரு மாதங்களில் தின சரியாக வெளிவரும் என்ற மகிழ்ச்சியான செய்தியினையும் தெரிவிக்கின்றேன்.

இதன் வெற்றிப் பயணத்தில் வாசகர்களாகிய நீங்கள் ஒரு பக்க பலமாக இருப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் அன்பு வேண்டுகோள் ஒன்றை முன்வைக்கின்றேன். நீங்கள் வாசிக்கும் "கருப்பு வெள்ளை" பத்திரிகையை குறைந்தது உங்கள் நண்பர்கள் இருவருக்கு Forward பண்ணுவீர்கள் என்ற நம்பிக்கையுடன்.

பலர் தாங்கள் வாழ்க்கையில் சிறப்பான வாய்ப்புக்களை இழக்கின்றார்கள். ஏனென்றால் அவர்கள் தம்முடைய இலக்கை நோக்கிச் செல்லும் பதைக்கான முதல் அடியை எடுத்து வைக்க தயங்குகிறார்கள் அப்படிப்பட்டவர்கள் தங்களைத் தாங்களே சந்தேகிக்கிறார்கள், பயப்படுகிறார்கள். இதனாலேயே அதிஷ்டவசமாக வாய்ப்புக்களைக் கூடத்தவற விடுகிறார்கள்

" இலக்கை நோக்கி உங்களை நகர்த்தும் வாய்ப்புகளை எவ்வளவு புத்தி சாதுாரியமாக பயன்படுத்திக் கொள்கிறீர்கள் என்பதே வெற்றி "

பல தடைகளையும் சவால்களையும் தாண்டி இலக்குகளை நோக்கி பயணிக்க அலாதி முயற்சி எடுப்பதற்கு "கருப்பு வெள்ளை" நிர்வாகம் என்றும் பின்னிற்காது.

இறை ஆசியுடனும் வாசகர்கள், நண்பர்களின் ஆத்மார்த்தமான அன்பும், ஆதரவுடனும் இன்ஷா அல்லாஹ் தொடர்ந்தும் " கருப்புவெள்ளை " பயணிக்கும்.......!!!

**எம்.எச்.எம். சியாஜ்**
**பிரதம ஆசிரியர்.**

உங்கள் ஆலோசனைகள், கருத்துக்கள், விமர்சனங்கள், படைப்புக்கள், ஆக்கங்கள், எழுத்துக்கள், உங்கள் கிராம செய்திகள் எதுவானாலும் தரமானவைகளுக்கு களம் அமைத்து தர நாம் தயார் ஆக்கம் எழுத்துருவிலோ.. அல்லது குரல் பதிவாகவோ.. இருக்கலாம் உடன் எமது வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.

077 47 48 407